தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

S.நாகராஜன் — தலைவர்
K.சந்திரசேகரன்,B.A — பொதுச்செயலாளர்
B.தியாகராஜன், M.Com., — நிதிச்செயலாளர்

**சுற்றறிக்கை எண் : 03/2019** நாள்: 13-03-2019

அன்புகெழுமிய சங்க உடன் பிறப்புகளுக்கு பொதுச்செயலாளரின் வணக்கங்களும் வாழ்த்துக்களும். 28-02-2019 நாளிட்ட சுற்றறிக்கை எண் 2ன் தொடர்ச்சியாக இந்த சுற்றறிக்கை வாயிலாக கீழ்கண்ட விபரங்களை உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

**இயக்க நடவடிக்கைகள்:**

ஏற்கனவே தெரிவித்திருந்தபடி இந்த திங்கள் 3 மற்றும் 4 தேதிகளில் திருவாரூர், நாகை பகுதிகட்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோம். திருவாரூரில் இரண்டு இடங்களில் சங்க கல்வெட்டுகளை திறந்து சங்கக் கொடியேற்றும் நிகழ்ச்சிகளையும், திருவாரூர் நாகை பகுதி பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் கூட்டத்தினையும் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தினர். கூட்டத்தில் முன்னாள் துணைத் தலைவர் திரு.தட்சிணாமூர்த்தி மற்றும் முன்னாள் வட்டச் செயலாளர் திரு.நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். திருவாரூர் வட்ட மத்திய அலுவலகங்களுக்கு சென்று உறுப்பினர்களை சந்தித்தோம். மேற்பார்வைப்பொறியாளர் அவர்களையும் மரியாதை நிமித்தம் சந்தித்தோம். சுற்றுப்பயணத்தில் என்னோடு சங்கத் தலைவர் திரு.S.நாகராஜன், துணைத்தலைவர்கள் திரு.P.அன்பழகன், திரு.K.அபுதாயர், அமைப்புச்செயலாளர் திரு.B.கோபாலகிருஷ்ணன், நிதிச்செயலாளர் திரு.B.தியாகராஜன் மற்றும் உதவிப்பொதுச்செயலாளர் திரு.E.சித்தையன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிகளை திருவாரூர் வட்ட அமைப்பாளர் திரு.G.தனசேகரன் மற்றும் நாகை வட்ட அமைப்பாளர் திரு.G.பார்த்தசாரதி ஆகியோர் முன்னின்று சிறப்புடன் நடத்தினர். தொடர்ந்து இம்மாதம் இறுதியில் விழுப்புரம் மண்டலம், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, கடலூர் வட்டப்பகுதிகளில் சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள உள்ளோம். மற்றபடி மாநில மகளிர் அணிச்செயலாளர் திருமதி.C.சுகந்தி அவர்களின் முன் முயற்சியால் பல்வேறு வட்டங்களில் 08-03-2019 அன்று மகளிர் தினத்தை மிகச்சிறப்பாக கொண்டாடியுள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

**வாரிய ஆணைகள் மற்றும் பதவி உயர்வு செய்திகள்:**

நிர்வாக உதவியாளர்கள் 120 நபர்கள் நிர்வாக மேற்பார்வையாளர் பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்று அவர்களுள் 40 நபர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பட்டியலில் இடம் பெற்றுள்ள கடைசி நபர் திருமதி.ஹெப்சிபா கோவை வடக்கு வட்டம், பதவி உயர்வு பெற்றுள்ள கடைசி நபர் திரு.M.முரளிதரன் செங்கல்பட்டு வட்டம், கணக்கு இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பொறுப்பிலிருந்து உதவியாளர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட 140 நபர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அனைவருக்கும்

பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற கடைசிநபர் திருமதி.M.ரஞ்சிதா திருப்பூர் வட்டம்.

வருவாய் மேற்பார்வையாளர் பதவி உயர்வுக்கு பட்டியல் தயாரித்திட 262 கணக்கீட்டாய்வாளர்களுக்கு தகுதிகாண் அறிக்கை கேட்கப்பட்டுள்ளது. பட்டியலில் இடம்பெற்றுள்ள கடைசிநபர் திரு.அருள்உதயகுமார் கோபி வட்டம்.

மற்றபடி பாராளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால் தேர்தல் நடத்தைவிதிகள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. பதவி உயர்வு, ஊர்மாறுதல், நியமனங்கள் ஆகியவைகள் வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது.

வாரிய நிர்வாகம் களப்பிரிவில் கேங்மேன் என்ற புதிய பொறுப்புக்கு 5000 நபர்களை நேரடித்தேர்வு மூலம் நியமித்திட 06-03-2019 தேதியிட்ட வாரிய ஆணை எண்:10 வாயிலாக உத்திரவினையும் 07-03-2019 தேதிய அறிக்கை எண்:1/2019 வாயிலாக அறிவிப்பையும் வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே தொழிலாளர் ஆய்வாளர்களிடம் நிரந்தர அந்தஸ்து பெறுவதற்கான ஆணைகள் பெற்ற மற்றும் K.2 ஒப்பந்தத்தின் மூலம் பணிபுரியும் ஒப்பந்த தொழிலாளர்களை உள்முகத்தேர்வு மூலம் நிரந்தரம் செய்யாமல் நேரடித் தேர்வு மூலம் “கேங்மேன்” என்ற பெயரில் நியமனம் செய்திட நிர்வாகம் முற்படுவதை கைவிடக் கோரி வாரியத் தலைவருக்கு 12-03-2019 அன்று கொடுத்திட்ட கடித நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அனைத்து சங்கங்களுடன் இணைந்து ஒப்பந்த தொழிலாளர் நியமனத்தில் நியாயம் பெறுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்து வெற்றி பெறுவோம் என்று உறுதி அளிக்கின்றோம்.

வாழ்த்துக்கள்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்: மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள், உதவிகோட்டச் செயலாளர்கள், கோட்டச்செயலாளர்கள், வட்ட மகளிர் அணிச்செயலளார்கள், வட்டச்செயலாளர்கள், வட்டத்தலைவர்கள், உதவி மண்டலச்செயலாளர்கள், மண்டலச்செயலாளர்கள், மற்றும் மத்திய சங்கப் பொறுப்பாளர்கள்.